MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-115)

12-03-2023 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சுபகிருது வருடம் ( மாசி 28 ) | வருட சந்தா ₹ 200 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 60 | இதழ் 11 பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360

ஆசிரியர் : பேரருள்பணி ஆ. அருளானந்தம்
துணை ஆசிரியர் : அருள்பணி L. ஆரோக்கியதாஸ்

## பொருளாதாரம் எப்போதும் சமூகப் பொருளாதாரமாக...



***அனைவருக்கும் பணிபுரியும் வகையில், வேறுபட்ட பொருளாதாரத்தைக் கனவு காணும் தைரியம் நமக்கு இருக்க வேண்டும் - திருத்தந்தை***

பிப்ரவரி 28 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட பெல்ஜிய கத்தோலிக்க வார இதழான "டெர்சியோ"விற்கு அளித்த நேர்காணலின் போது, "பெரும் தொழில்களை நடத்தும் ஒரு சிலரின் கைகளில் செல்வம் இருப்பதால், எளிய மக்கள் சுரண்டலுக்கு ஆளாகிறார்கள், பொருளாதாரம் எப்போதும் சமூகமாக, சமூக சேவையில் சமூகப் பொருளாதாரமாக இருக்க வேண்டும். அறிவற்ற போரினால் உலகில் பெரும்பாலான மக்கள் உண்ணவும் வாழவும் சிரமப்படுகின்றார்கள், போர் என்பது பெரிய ஆயுதத் தொழில்" என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் முதல் தற்போதைய சினோடல் செயல்முறை வரை, உக்ரைன் போர் முதல் உலகில் மறக்கப்பட்ட மோதல்கள் வரை என பல்வேறு கருத்துக்களை நேர்காணல் வழியாக எடுத்துரைத்துள்ள அவர், குறிப்பாக, "யாரையும் பின்தள்ளாத பொருளாதார வளர்ச்சியின் புதிய மாதிரியை விரிவுபடுத்தவும்" அழைப்பு விடுத்துள்ளார்.

"இரஷ்யா - உக்ரைன் போர் தொடங்கிய காலகட்டத்திலிருந்தே திருஅவை, அமைதிக்கான முயற்சிகளை எடுத்து வருகிறது. அறிவற்ற போர், பெரிய ஆயுதத் தொழிலின் விளைவு. ஒரு பணக்கார நாடு பலவீனமடையத் தொடங்கும் போது, அது மீண்டும் வலுவாக இருக்க ஒரு போர் தேவை என்று கூறப்படுவதால், அதற்கு ஆயுதங்களும் தயாராகின்றன. தலத்திருஅவை, புனித பிரான்சிஸ் அசிசியின் பொருளாதாரம், அருள்பணியாளர்களின் பணி, போன்ற பல கருத்துக்களை இந்த நேர்காணலில் பகிர்ந்து கொண்டுள்ளார் திருத்தந்தை.

## பாடுகளை நோக்கியப் பாதையில் உருமாற்றம்

***தந்தையாம் இறைவனின் சாயலையும், விண்ணுலக வாழ்வின் முன்சுவையையும் நமக்குக் காட்டுவதாக இயேசுவின் உருமாற்றம் இருந்தது***

மார்ச் 5, ஞாயிற்றுக்கிழமையன்று வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு நண்பகல் மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஞாயிறு நற்செய்தி வாசகம் எடுத்துரைத்த இயேசுவின் உருமாற்றம் குறித்து விவரித்து, "தெய்வீக அன்பு இயேசுவில் மனுவுருவெடுத்ததை வெளிப்படுத்திய இந்த உருமாற்றம், தந்தையாம் இறைவனின் சாயலையும், விண்ணுலக வாழ்வின் முன்சுவையையும் நமக்குக் காட்டுவதாக இருந்தது" என்றார்.

"இயேசுவின் உருமாற்றம் அவரின் சீடர்களில் பெருமகிழ்ச்சியைக் கொணர்ந்ததுபோல், இயேசு எந்த அன்பால் சிலுவையில் அறைந்து கொல்லப்பட தன்னை அனுமதித்தாரோ அதனை ஏற்றுக்கொள்ள சீடர்களை தயாரிப்பதாக இந்த உருமாற்றம் இருந்தது.

இந்த உருமாற்ற மகிமைத் தொடரவேண்டும் என புனித பேதுரு விரும்பினாலும் இயேசு அதனை அனுமதிக்கவில்லை, ஏனெனில், இதனை ஒரு கடந்து செல்லும் உணர்வாகவோ, மாயஜால நிகழ்வாகவோ நோக்கப்படும் அபாயத்தை இயேசு தவிர்க்க விரும்பினார். இந்த அனுபவம் அவர்களை விசுவாசத்தில் ஆழப்படுத்த வேண்டும், வாழ்வின் உண்மைத்தன்மையை உணர வைக்க வேண்டும், வாழ்வுப் பயணத்தில் தயாரிக்க உதவவேண்டும் என இயேசு விரும்பினார்.

பாலவனத்தில் அலையும் மக்களுக்கு ஒரு நெருப்புத் தூணாகச் செயல்படும் இயேசு, எருசலேமை நோக்கிய, அதாவது சிலுவையை நோக்கியப் பாதையில் தன் சீடர்களை தயாரிக்க விரும்பியதே இந்த உருமாற்றம்.

நற்செய்தியால் வழிநடத்தப்படும் நாம் நம் பாதையில் இயேசுவை எப்போதும் அண்ணாந்து பார்க்க வேண்டியது அவசியம். மேலும் நம் குடும்பம், நண்பர்கள் மற்றும் உடன் உழைப்போர் ஆகிய அனைவரின் முகத்திலும் இறைவனின் அழகைக் கண்டுகொள்வோம். மற்றவர்களுக்குப் பணிபுரிவதிலும், அவர்களை அன்புகூர்வதிலும், மன்னிப்பதிலும் தாராள மனத்துடன் செயல்படுவோம்" என அனைவருக்கும் அழைப்பும் விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆசிரியர் பேனா...

# அவசர சே(தே)வை

**வதந்தி(தீ):** புலம் பெயர்ந்த பீகார் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதாக தகவல் ஊடகங்களில் பரவியது. இதனால், தமிழகம் மற்றும் பீகார் மாநில அரசுக் களுக்கும், மக்களுக்கும் இடையே கொந்தளிப்பு ஏற்பட்ட தையும் நாம் அறிவோம். இரு மாநில அரசுக்களின் விரைவு நடவடிக்கையின் விளைவாக இந்த தகவல் 'வதந்தி' என்று உறுதிபடுத்தப்பட்டது. காட்டையோ, வீட்டையோ சுட்டெரித்து சாம்பலாக்கும் ஆற்றல் படைத்தது தீ. அதனை விரைந்து கட்டுப்படுத்தி அணைக்காவிட்டால் பெரும் சேதத்தை உருவாக்கும். அதுபோலவே அரசய-லும் ஆட்சியிலும் வதந்திகளை கட்டுப்படுத்தாவிட்டால் நாட்டிலே அமைதி சீர்குலைந்து விடும். வதந்தியை பரப்பியவர் ஒரு குறிப்பிட்ட தேசிய கட்சியைச் சேர்ந்தவர் என்பதும், அவரைக் கைது செய்ய நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது என்பதும் செய்தி.

**தலைவர்கள்:** இரு மாநில அரசுகளுக்கும் இடையே சட்டம் ஒழுங்கு சிக்கலை ஏற்படுத்தி, அரசியல் ஆதாயம் தேடிக்கொள்ள சதி செய்யப்பட்டதாக சொல்லப்படுகிறது. இத்தகைய செயல் நாகரிகமான கட்சி அரசியலுக்கு ஏற்றதல்ல. அது அக்கட்சிகளின் உறுப்பினருக்கு தேசிய மக்கள் நலனில் அக்கரை இல்லை என்பதை உணர்த்துகிறது. மேலும் மக்கள் துன்புற்றாலும் எ(ங்கள்) ன் சதி நிறைவேற வேண்டும் என்ற அரக்க குணத்தை வெளிப்படுத்துகிறது. இத்தகைய மனப்பான்மை மக்கள் பிரதிநிதிகளிடம் இருந்தால் அதை தீ (மை) யெனக் கருதி உடனே கட்டுப்படுத்த ஆட்சியாளர்களின் அவசர சே(தே)வையில் ஈடுபட வேண்டும். மக்கள் நலனில் அக்கறை கொண்ட தலைவர்கள் இன்றைய அவசர தேவை.

**இராமராஜியம்:** ஒவ்வொருவரும் தம் கடமையை தவறாது செய்து அனைவருக்கும் நன்மை பயக்கும்படி வாழ்வதே தர்மம். தர்மம் செழித்திருக்கும் ஆட்சிதான் இராமராஜ்ஜியம் என்று கூகுள் விளக்கம் தருகிறது. இராமராஜ்ஜியம் என்பது 'கடவுள் அரசு' (Kingdom of God on earth) என்பதற்கு இணையானது. இது மக்களிடையே அமைதிக்கும் (Peace) மக்களின் வளமையான வாழ்வுக்கும் (Prosperity) வழிவகுக்கும் என்று சொல்லப்படுகின்றது. கடவுளின் அரசில், சமத்துவ உணர்வும், வன்முறையற்ற வாழ்வு, பொய்மை விளக்கி உண்மை பேசும் உயர் பண்பும் மக்களிடையே நிலைத்திருந்தது. இப்படிப்பட்ட வாழ்வுதான் இன்றும் நாம் விரும்புகின்றோம்.

**நம் நாகரீகம்:** 2600 ஆண்டுகளுக்கு முன்பே வளமையும் நற்பண்பும் கொண்டிருந்த நாகரீக சமூகம் நம் தமிழ்ச் சமூகம் என்பதை கீழடி அகழ் ஆய்வு உணர்த்துகிறது. மற்றவரை மதித்து வாழ்ந்து அடுத்தவரை சார்ந்து வாழ்ந்து அனைவரும் மகிழ்ந்திருக்க செய்வது நம் நாகரிகம், "உலகைப் பொதுவுடமையாக்கி (இயற்கையை போற்றி வழிபட்டு பாதுகாத்தல்) அதில் தொழிலாளர்களாகவும் கூட்டுப் பங்காளிகளாகவும் வாழ்வதை (நம்) மார்க்கமாக கொண்டிருந்தது சமூகம்." (தினமணி, 23-2-2023, தி.இராசகோபாலன் புறாக்களை வேட்டையாடும் புதிய ரஷ்யா) மற்றவரை மதிக்கின்ற கலாச்சாரத்தையும், நாகரிகத்தையும் ஆட்சியாளர்களும், கட்சித் தலைவர்களும் கடைபிடித்தால் நாட்டிலே அமைதியும் வளர்ச்சியும் செழிக்கும்.

**அரசின் கடமை:** இந்த உண்மையை தமிழக முதல்வர் திரு. மு.க.ஸ்டா-ன் தெரிந்து கடைபிடித்து வருவது நமக்கு பெருமை. மதுரை சாலையிலே நின்றிருந்த மக்களை அணுகி கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டது அவருடைய மதிப்பை உயர்த்தியது. அதுமட்டுமல்ல "கோரிக்கை மனுக்கள் வெறும் காகிதம் அல்ல அவை மக்களின் வாழ்க்கை ஏக்கங்கள், அவற்றை அதிகாரிகள் உடனடி கவனம் செலுத்தி மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அதிகாரிகளுக்கு உணர்த்தியது பாராட்டுக்குறியது. மக்கள் தேவையை அவசர சேவையாக செய்வதே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் கடமை.

**மனிதன்-எந்திரம்:** சிந்திக்கும் மூளையும், அன்பு செய்யும் இதயமும் கொண்டு பண்பட்டவன் மனிதன். தனிமையையும், பிரிவினையை விலக்கி, கூட்டொறுமையின் பலனை சமூகமாக அனுபவிக்க கற்றவன் மனிதன். இதுவே நாகரிகமாக கருதப்பட்டது; வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் வழியாக கடைபிடிக்கப்பட்டது. இந்த 21ம் நூற்றாண்டின் தொழில்நுட்பமும், கணினி மயமும், மனிதனை சுயநலவாதியாகவும், பிரிவினை வாதியாகவும் மாற்றிவிட்டன. மனிதன் சுயமாக சிந்திக்காமல், அன்பற்ற இதயம் கொண்ட ஒரு எந்திரமாக மாற்றம் பெற்றுவிட்டான். இதன் விளைவுகள் பொருளாதாரத்தை முன்நிறுத்திய போட்டிகளும், போர்களும், பணம் இருந்தும் நிம்மதியற்ற தனிமை பயமும், அதி-ருந்து தப்பிக்க போதை பழக்கங்களும், உரிமை மறுக்கப்பட்டு, வஞ்சிக்கப்பட்டதனால் ஏழ்மையின் கொடுமையும் - பசி பிணியும்.

**மனம் மாற்றம் வேண்டும்:** எந்திர மனிதன், இயல்பான மனிதனானால்தான் உலகம் (சமுதாயம்) பிழைக்கும். இந்த மாற்றம் இன்றைய மிகமிக முக்கிய அவசர தே(சே)வை. ஒரே வழி மனிதன் கடவுளை சரணடைய வேண்டும். கடவுளை மறந்து சமுதாயமும் வாழ முடியாது, கடவுளாகி விடவேண்டும் என்ற ஆசை கொண்ட மனிதனும் அழிந்து விடுவான். (மகாப-விஷ்ணு) (தொ.நூ.3:4-7) சமுதாயம் வாழவேண்டும் என்றால் மனிதனுள் இருந்து வருவதெல்லாம் நல்லதாக இருக்க வேண்டும் (மாற்கு 7:14-16) மனிதன் மனம் மாற வேண்டும், மதம் மாற வேண்டாம். மனிதன் மனம் மாறுவது இப்போதைய

**அவசர தே (சே) வை.**



19-03-2023

# பார்வை பெற...



அருள்திரு. A. தெய்வநாயகம்
பங்குதந்தை, ஆற்காடு.

1சாமு 16:1ஆ,6-7,10-13அ எபே 5:8-14; யோவா 9:1-41

கண்கள் ஆயிரம் பேசும், கட்டளையிடும், அதிகாரத்தை வெளிப்படுத்தும், புன்னகையை காட்டும், கனிவை, ஆம்-இல்லை என்று அசைவிலேயே புரிதலை கொடுக்கும். கண்தான் உடலுக்கு விளக்கு. இன்றைய இறைவார்த்தையின் வழியாக நாம் ஒவ்வொருவரும் பார்வை பெற வேண்டும். கண்களில் இருந்து மட்டும் அல்ல நம் இதயத்திலும். இயேசுவை முழுமையாக புரிந்து கொண்டு நமது நம்பிக்கையை வலுப்படுத்துவோம்.

## பாவம் - துன்பம்



நாம் செய்யக்கூடிய பாவத்திற்கும் நமது வாழ்வில் வரக்கூடிய துன்பத்திற்கும் தொடர்பு உண்டா என்ற கேள்வி ஒவ்வொருவர் மனதிலும் காலம் காலமாக எழுவது இயல்பு. விவிலியத்தில் சில வசனங்களை பார்க்கும் போது இரண்டிற்கும் தொடர்பு உள்ளது போல தோன்றுகிறது. "இதோ பாரும், நீர் நலமடைந்துள்ளீர் இதைவிட கேடானது எதுவும் நிகழாதிருக்க இனி பாவம் செய்யாதீர்", (யோவா 5:14). "... என்னை புறக்கணிக்கும் மூதாதையரின் பாவங்களைப் பிள்ளைகள் மேல் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் தண்டித்து தீர்ப்பேன்" (விப 20:5). ஆனால் வேறு சில வசனங்கள் பாவத்திற்கும் துன்பத்திற்கும் தொடர்பு இல்லை என கூறுகின்றன (லூக் 13:2-3). பல சமயங்களில் நாம் செய்யக்கூடிய செயல்களால் நாம் பயனடைகிறோம். நேர்மறையான செயல்பாடுகள் நமக்கு இன்பத்தை தருகின்றன. எதிர்மறையான செயல்பாடுகளால் நாம் துன்பத்தை அனுபவிக்கிறோம். எனவே இன்பத்தை பெற்றுக் கொள்வதும் துன்பம் வராமல் காத்துக் கொள்வதும் நமது வாழ்வை பொறுத்ததாக அமைகிறது.

## பிறவியிலேயே பார்வையற்றவன்

பிறவியிலேயே பார்வையற்ற மனிதனுக்கு இயேசு பார்வை கொடுக்கிறார். ஒரே ஒரு வார்த்தையின் வழியாக பல வல்ல செயல்களை செய்த இயேசு இந்த மனிதனுக்கு பார்வை கொடுக்கும் போது உமிழ்ந்து, சேறு உண்டாக்கி, பூசி, கழுவுமாறு சொன்னது நமக்கு வியப்பாய் தோன்றுகிறது. எதற்காக இயேசு இவ்வாறு செய்கிறார் என்று உள்ளார்ந்த உணர்வோடு சீர்தூக்கி பார்க்கிற பொழுது பார்வையற்ற மனிதனின் நம்பிக்கையை ஆழப்படுத்துகிறார். இயேசுவின் வல்லமையை வேண்டுகின்ற இந்த மனிதன் அவரை ஆழமாக நம்புவதற்கு உதவுகிறார். உமிழ்தல், பூசுதல், கழுவுதல் போன்ற செயல்களால் நோயாளியின் நம்பிக்கையை வலுப்படுத்துகிறார்.

## பார்வை - பலவிதம்

நம்மைப் போல் பிறர் பார்ப்பதில்லை. பிறரைப் போல நமது பார்வையும் இருப்பதில்லை. பார்வைகள் மாறுபடுகின்றன. தெருவில் ஒரு நபர் கந்தலான ஆடை அணிந்திருந்தால் அவரைப் பார்க்கும் பார்வை ஏளன பார்வையாக இருக்கும் அல்லது பரிதாப பார்வையாக இருக்கும். பகட்டான ஆடை அணிந்து வரும் மனிதனைப் பார்த்தால் அவன் வசதியை நோக்குவோம் அல்லது நாம் அவனைப் போல் இல்லையே என ஏங்குவோம். பிறருக்கு நல்லது கிடைக்கும் போது நாம் மகிழ்கிறோமா அல்லது பொறாமைப்படுகிறோமா?. பார்வையற்றவருக்கு இயேசு பார்வை கொடுத்த செயலை ஓய்வு நாளை மீறிய செயலாக பார்த்தனர் பரிசேயர். பிறவியிலேயே பார்வையற்றவன் பார்வை பெற்றுள்ளானே என மகிழ்ந்து களி கூறாமல், இயேசு சட்டத்தை மீறி விட்டாரே என்று நீலி கண்ணீர் வடிக்கிறார்கள். உண்மையிலேயே இயேசு சட்டத்திற்கு நிறைவு கொடுக்கிறார்.

## பார்வையின் படிநிலை

பார்வை பெற்றவர் படிப்படியாக தனது நம்பிக்கையை அறிக்கை யிடுகிறார்.

1. இயேசுவை "இறைவாக்கினராக" பார்க்கிறார் (யோவா 9:17).

2. இயேசுவை "கடவுளிட மிருந்து" வந்தவராக காண்கிறார் (யோவா 9:33).

3. இயேசுவை " மானிட மகனாகவும் , ஆண்டவராகவும்" கண்டு கொள்கிறார் (யோவா 9:35-38).

நாமும் பார்வை பெற வேண்டும். கண்களால் பார்க்கக் கூடியவர்கள் உண்மையான பார்வை பெற்றவர்கள் அல்ல. விசுவாசத்தினால் நமது நம்பிக்கையை மிகுதியாக்கி படிப்படியாக இயேசுவை மெசியாவாக, மானிட மகனாக, ஆண்டவராக ஏற்று வாழ அழைக்கப்படுகிறோம். பார்வையற்ற மனிதன் இயேசுவை தெரியாது என்று தொடக்கத்தில் சொன்னாலும் அனுபவத்தின் வழியாக இயேசுவை ஏற்றுக் கொள்கிறான். பல சமயங்களில் அறியாமையினால் விசுவாச வாழ்வில் இருந்து விலகி இருந்திருப்போம். ஆனால் இன்று படிப்படியாக இறைவார்த்தையின் வழியாக இயேசுவின் ஒளி பெற்று பார்வைப் பெற்ற மனிதர்களாக வாழ்வோம்.



# இறைவனே ஆதாரம்



– சுவாமி ஆ. லூயிஸ்.

என் உயிரே, ஆண்டவரைப் போற்றிடு. என் கடவுளாகிய ஆண்டவரே, நீர் எத்துணை மேன்மைமிக்கவர், நீர் மாண்பையும், மாட்சியையும் அணிந்துள்ளவர் ஆண்டவரே உம் வேலைப்பாடுகள் எத்தனை எத்தனை. நீர் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர். பூவுலகம் உமது படைப்புகளால் நிறைந்துள்ளது. உமது ஆவியை அனுப்ப அவை படைக்கப்பெறுகின்றன, மண்ணுகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர். ஆண்டவரே உமது கை படைத்தவற்றை, அவர்கள் ஆளும்படிச் செய்துள்ளீர். எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி யுள்ளீர். நீர் நீதியுள்ள ஆண்டவர், நேரிய செயல்களை விரும்புகின்றீர், அவர் திருமுகத்தை நேர்மையாளர் காண்பர்.

**கீதையின் சாரம்:**

ஞானத்தைப் பெற்றவர் என்னை அறிவர்.
எனது தெய்வீக இயல்பே அவர்களின் புக-டம்
ஒரே அன்போடு என்னை அன்பு செய்கின்றனர்.
நானே அனைத்திற்கும் ஆதாரம் என்பதை உணர்வர்.
பக்தியோடு என்னை என்றும் போற்றுகின்றனர்.
அவர்களின் வார்த்தைப்பாடும் பக்தியும் உறுதியானவை.
என்னை அன்போடு வழிபடுகின்றனர்.
ஞானக் கண்களோடு வழிபட்டு பணிபுரிகின்றனர்.
நானே ப-யும் காணிக்கையும், கொடையும் தளிரும்.
நானே புனிதவாக்கு உணவு, அக்கினி, ப-யாகும் தீ.
நானே படைப்பின் தந்தையும் தாயும்.
தூய்மையின் புக-டம், வேதங்களும் நானே,
மகாமந்திரமான ஓம் என்பதும் நானே.
நானே துவக்கமும் நடுவும் முடிவுமாவேன்.
சூரியனின் சுடர் நான், மழையைப் பொழிவதும் நானே
நானே இருப்பதும் இல்லாததும் ஆகும்.

**நற்செய்தி:** அல்லேலூயா, என் நெஞ்சே, நீ ஆண்டவரைப் போற்றிடு. நான் உயிரோடு உள்ளவும் ஆண்டவரைப் போற்றிடுவேன். என் வாழ்நாளெல்லாம் என் கடவுளைப் புகழ்ந்து பாடிடுவேன். ஆட்சித் தலைவர்களை நம்பாதீர்கள், உன்னை மீட்க இயலாத மானிட மக்களை நம்ப வேண்டாம். என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது. நானே உலகின் ஒளி. நான் தனியாகத் தீர்ப்பு வழங்குவதில்லை. என்னை அனுப்பிய தந்தையும் என்னோடு இருக்கிறார். உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார். வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை.

கடவுள் நம்மோடு இருக்கிறார். நாம் அவரோடு இருக்கிறோம் என்ற உணர்வுடமை என்றும் வளர்வதாக. கடவுள் அனைத்திலும் இருந்தாலும் எல்லாம் கடவுள் அல்ல என்பதில் கவனமாக இருப்போம். அவர் உடன் இருக்கிறார், கடந்தும் இருக்கிறார். படைப்பை நாம் வழிபடுவதில்லை, படைப்பில் இருக்கும் இறைவனை உணர்வது உகந்தது.

**அன்றாட அனுபவம்:** படைப்பை தரிசிக்கும்போது, இறைவனின் சாயலான ஆணையும் பெண்ணையும் பார்க்கும் போது இறை உணர்வு மேலெழுந்தால் இறையரசு இதயத்திலும் இல்லத்திலும் எங்கும் இருக்கும். படைப்பின் சிகரம் ஆணும் பெண்ணும் என்பதை மறக்க வேண்டாம். இன்று பலா் படைப்புக்கு, சொத்து, சுகத்திற்கு அடிமையாகி விடுகின்றனர். இந்த சுயநலத்திற்குப் பலர் கடவுளை திருத்தலத்தை நாடுகின்றனர். கிறிஸ்தவர்கள் இதில் கவனமாய் இருந்து திருச்சபையிலும் உலகிலும் கடவுள் விரும்பும் சாட்சிகளாய் உயிர்த்த ஆண்டவரின் ஆவியோடு விளங்க வேண்டும். திருச்சபையின் கடமை. பொறுப்பு, உரிமை இவைகளைத் திருச்சபையின் அதிகாரப்பூர்வமான போதனைப்படி விசுவசிப்போம், வாழ்வோம்.

**இந்தியக் கிறிஸ்தவர்:** நாம் இந்தியர்கள், தமிழர்கள் என்று பொதுவாகவும், குறிப்பாகவும் பெருமைப்படுவோம். சாதி, இனம், மொழி, பா–னம் என்று வேற்றுமையை வளர்க்காமல், மனிதம், சமயவாதிகள், தங்களை அர்ப்பணித்தவர்கள் துறவிலும், இல்லறத்திலும் என்று மக்களைக் கட்டி எழுப்புவோம். கிறிஸ்தவர்கள் முன்வரிசை யில் முன்னோக்கி பயணிப்போம். இவ்வாறு நற்செய்திப் பணி நம்மைச் சூழ்ந்து இடம் பெறுவதாக. இறைவா எனக்கு நீதான் வேண்டும், வேறு எதுவும் வேண்டாம், ஏனெனில் இறைவனில் நமக்குத் தேவையானவை எல்லாம் அளவுக்கு மேல் அதிகமாக உண்டு என்று புகழ்வோம், நன்றி கூறுவோம், வாழ்ந்து சான்று பகர்வோம்.

# திருச்சிலுவையின் மகிமை



– வெட்டிவயல் வளவன்



திருச்சிலுவை என்பது
வகுப்புவாதம் பயங்கரவாதமும்
மதவெறியும் தீண்டாமையும் கூடா–கால்
வாரிகளுக்கு சொல்–ய **கல்வாரி அன்பு**
திருச்சிலுவை என்பது
சீமோன் உதவி எம்மாவூஸ் சந்திப்பு
சாலையிலே என்னைச் சந்தியுங்கள்–இறை
அழைப்பின் உயிர்ப்பு **மடல் விடு தூது**
திருச்சிலுவை என்பது
புலம்பியழும் செருசலம் – மாதராய்
புலம்பெயர்ந்த மக்களுக்காய் – நாம்
ஆற்றுப்படுத்தும் **வேடந்தாங்கல்**
திருச்சிலுவை என்பது
வெரோணிக்காள் பதித்த துகிலும்
குரோதத்தை விலக்கிய முத்திரையாய் – வாழ்க்கை
படம் பிடித்த உயிர்ப்பு – **படக்கருவி**



திருச்சிலுவை என்பது
தன்னைத் தகனப் ப-யாக்கி
மானிட இரட்சிப்பு மீட்புக்கு – தன்
இளமையை ஈந்த **இளங்குருத்து**
திருச்சிலுவை என்பது
கழுத்தில் மாட்டும் கருவியல்ல
சேற்றைக் கழுவி விடும் அருவி – பாவக்
கரைபோக்கும் ஒப்புரவு **சந்தனம்**



திருச்சிலுவை என்பது
மனமாற்றம் மடைமாற்றத்தின்
புடமிட உலையிடும் பொன்னாகும் – வான்
வீட்டின் வெற்றிக்கு **வழித்துணை**

**(எனவே)**

திருச்சிலுவை என்பது
துன்பத்தில் துவளாதீர் உறுதிக்கொண்டு
இன்பத்தில் சிலுவை சிந்தைகொண்டு – இறை
ஒன்றிப்பில் வாழ்ந்து மகிழ்வோம்.

# 40 நாற்பது!

- அருள்சகோதரி டெரன்ஸ்மேரி, FIHM



- இஸ்ரயேல் மக்கள் கானான் தேசத்தை அடைய மேற்கொண்ட பாலைவனப் பயணம் நாற்பது ஆண்டுகள்.
- இஸ்ரயேல் மக்கள் கானான் நாடு சென்றடையும் வரை மன்னா உண்டது நாற்பது ஆண்டுகள்.
- தீமைகள் செய்த இஸ்ரயேலரை ஆண்டவர் பெலிஸ்தியர் கையில் ஒப்படைத்தது நாற்பது ஆண்டுகள்.
- ஏலி இஸ்ரயேலருக்கு நீதித் தலைவராய் இருந்தது நாற்பது ஆண்டுகள்.
- பென்யமின் குலத்தினராகிய சவுல் நல்லாட்சி புரிந்தது நாற்பது ஆண்டுகள்.
- முப்பது வயதில் அரசரான தாவீது ஆட்சி புரிந்தது நாற்பது ஆண்டுகள்.
- சாலமோன் எருசலேமில் இஸ்ரயேலரை ஆட்சி செய்தது நாற்பது ஆண்டுகள்.
- நேர்மையாளரான போவாசு எருசலேமை ஆட்சி செய்தது நாற்பது ஆண்டுகள்.
- அக்கிரமங்கள் அதிகரித்ததால், ஆள் நடமாட்டமோ, கால்நடை நடமாட்டமோ இல்லாமல் ஆண்டவர் எகிப்தைப் பாழடையச் செய்தது நாற்பது ஆண்டுகள்.
- நோவா காலத்து அழிவு நாற்பது நாள்கள்.
- மோசே சீனாய் மலையில் ஆண்டவரை தரிசிக்க உண்ணா நோன்பிருந்தது நாற்பது நாள்கள்.
- ஆண்டவரின் தூதர் அளித்த உணவினால் வலிமையடைந்த எலியா, அந்த வலிமையினால் கடவுளின் மலையாகிய ஓரேபு மலையை அடைய எடுத்துக்கொண்டது நாற்பது நாள்கள்.
- நினிவே மனம் மாற ஆண்டவர் அவகாசம் கொடுத்தது நாற்பது நாள்கள்.
- எதிர்வரும் கல்வாரி துன்பங்களைச் சந்திக்க இயேசு நோன்பிருந்து சக்திபெற்றது நாற்பது நாட்கள்.
- இயேசு துன்புற்று இறந்தபின் அவர்களுக்குத் தோன்றி இறையாட்சியைப் பற்றிக் கற்பித்தது நாற்பது நாட்கள்.

அப்படியெனில்,

- பயணத்திற்கு நாற்பது...
- துன்பத்திற்கு நாற்பது...
- தண்டனைக்கு நாற்பது...
- ஆட்சியுரிமைக்கு நாற்பது...
- அழிவிற்கு நாற்பது...
- மனமாற்றத்திற்கு நாற்பது...
- ஆண்டவரின் ஆசிபெற நாற்பது...
- துன்பத்தின் முன்தயாரிப்பிற்கு நாற்பது...
- இறையாட்சியைக் கற்பிக்க நாற்பது...

**40**

→ இஸ்லாமியருக்கு நாற்பது நாள்...

→ இந்துக்களுக்கு நாற்பது நாள்...

→ கிறிஸ்தவர்களுக்கு நாற்பது நாள்...

**ஆகமொத்தத்தில் நாற்பதில் ஏதோ ஒரு முழுமை இருப்பது தெரிகிறது. எந்த ஒரு காரியத்தையும் நாற்பது நாள்கள் தொடர்ந்து செய்கின்றபோது அதற்கு வலிமையும், வல்லமையும் அதிகம் உண்டு என்பது இந்த நாற்பதின் வழி புரிகிறது அல்லவா!**

**40**

**நாற்பது நாளில்...**
**கடவுளைக் கற்பதும்,**
**நேர்மையில் நிற்பதும்,**
**விரக்திகளை விற்பதும்,**
**தீமைகளைத் தீர்ப்பதும்,**
**எளியோரை ஈர்ப்பதும்,**
**பசித்தோரைப் பார்ப்பதும்,**
**இயேசுவை ஏற்பதற்கு வழியாகும்.**

## அறிவிப்பு

புதுவை-கடலூர் உயர் மறைமாவட்ட அருட்தந்தையர்களுக்கு ஓர் அன்பான அறிவிப்பு. தங்கள் பங்குகள் மற்றும் பள்ளிகளில் நடைபெறும் சிறப்பு நிகழ்வுகள், மற்றும் செயல்பாடுகளைப் பற்றிய செய்திச் சுருக்கத்தை 10 வரிகளுக்குள் மிகாமல் எழுதி அனுப்பினீர்கள் என்றால், அவை நமது சர்வவியாபி வார இதழில் பிரசுரிக்கப்படும்.

**குறிப்பு** செய்திகளை அஞ்சல் மூலமாகவோ, வாட்ஸ்அப் மூலமாகவோ அனுப்பவும்.

தொடர்புக்கு: 95788 39605

## விண்ணக வாழ்வின் IIம் ஆண்டு நினைவு



**Mr.S.Philomineraj**

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர் - யோவா 11:25

**தோற்றம் :20-09-1943**
**மறைவு : 18-03-2012**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 18-03-2023 சனிக்கிழமை அன்று காலை 6.30 மணிக்கு வில்-யனூர், தூய லூர்து அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்ப-யில் கலந்துகொண்டு செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
மனைவி: **P. பவு-ன்**
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
மற்றும் உறவினர்கள்.

# முயன்றால் முடியாததுண்டா?

211



– திரு B. மேரி ராபர்ட் சாந்திதாஸ்,
புதுவை–1.

**நம்பிக்கை மனிதர்:** கோலனல் ஹர்லான் ஸாண்டர்ஸ்க்கு 65 வயது நிரம்பியபோது மனதளவில் மிகவும் நொறுங்கியவராகக் காணப்பட்டார். துரதிர்ஷ்டம் அவரை துரத்தியடித்ததில் அவர்தம் தொழிலையே மூடவேண்டியதாகி விட்டது. அவருடைய பல வருட கடின உழைப்பினால் மிகக் குறைவாகவே சாதிக்க முடிந்தது. அவரிடம் மீதமாக இருந்ததெல்லாம் ஒரு வீடு, ஒரு பழைய கார், சிறிதளவு சேமிப்பு, அவ்வளவுதான். ஆனால் அதற்கு மேலும் அவரிடம் ஒன்று இருந்தது. அதுதான் அவரது கனவு, இலட்சியம்!

**இலட்சிய கனவு:** அவர் ஓட்டல் தொழில் நடத்தியவர். அவருக்கென்று தனித்துவமான உணவு செய்முறை இருந்தது. அதை அவர் விற்க முடியும், தனி உரிமம் பெற முடியும். மேலும் அவருக்கு ஓய்வு பெறும் எண்ணம் சிறிதளவும் இல்லை! "சும்மா இருந்து துருபிடிப்பதைவிட, உழைத்து ஓடாகத் தேய்வதே மேல்" என்ற உறுதியான மனதுடனே செயல்பட்டார்.

**இலட்சிய பயணம்:** ஸாண்டர்ஸ் அமெரிக்காவில் கென்டுக்கி மாநிலத்திலுள்ள தன் ஊரி–ருந்து புறப்பட்டு தன்னுடைய தனி சிறப்பு வறுத்தகோழி செயல்முறை இரகசியத்தை விரும்புகிறவர்களைத் தேடிப் பயணம் ஆனார். யாரும் அவருடைய தனிச்சிறப்பு சமையல் தயாரிப்பில் அவ்வளவு எளிதாக விருப்பம் காட்டாவிட்டாலும் அமெரிக்கவின் பிற மாநிலங்களான இந்தியானா, இல்லனாய்ஸ், மிசூரி, கான்லாஸ் என்று பயணம் செய்து சால்ட் லேக் சிட்டியை அடைந்தபோது அவருக்கு முதல் ஒப்பந்தம் கிடைத்தது. இப்போது அவருக்கு அமோக வரவேற்பு கிடைத்தது. மக்கள் பெருமளவில் அவருடைய தனிச்சிறப்பு சமையல் முறையை பெரிதும் விரும்பி வரவேற்க ஆரம்பித்தார்கள். குறுகிய காலத்திலேயே நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான உணவு விடுதிகளில் அவருடைய படுருசியான உணவு முறை விற்பனையில் களைகட்டியது! இந்த உணவு முறைதான் உலகம் முழுவதும் **KFC** உணவகங்களில் பரிமாறப்படும் **K**entucky **F**ried **C**hicken!

கோலனர் ஹர்லான் ஸாண்டர்ஸ் ஆரம்பித்த இந்த **KFC** உணவகங்கள் ஒரு தனி மனிதனின் விடாமுயற்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஒரு கனவு, ஒரு திட்டம், நம்பிக்கை, செயல் திட்டம், விடாமுயற்சி இவையெல்லாம் மனதில் மறைந்திருந்த ஒரு விருப்பத்தை நிஜமாக்கியது. அதேபோன்ற செயல்திட்டம் நம் கனவுகளையும் நிஜமாக்கி பயனளிக்கும். நாமும் நம்முடைய விருப்பங்களை கடவுளுடன் பகிர்ந்து அவர் ஆசீர்வாதத்தை நாடினால் நிச்சயமாக அவர் நம் எண்ணங்களை நிஜமாக்குவார்.

**நற்செய்தி: மத்தேயு 17:20**

இயேசு அவர்களைப் பார்த்து, ............... "உங்களுக்குக் கடுகளவு நம்பிக்கை இருந்தால் நீங்கள் இம்மலையைப் பார்த்து இங்கிருந்து பெயர்ந்து அங்கு போ எனக் கூறினால் அது பெயர்ந்து போகும். உங்களால் முடியாதது ஒன்றும் இராது என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்."

# உன்னதமான அர்ப்பணமும் இறை வேண்டலும்

– அபிரா.

ராணுவ வீரர் ஜோசப் தனது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளை தனது பெற்றோரின் பாதுகாப்பில் விட்டுவிட்டு தாய் நாட்டைக் காக்க வேண்டும் என்ற உயரிய எண்ணம் கொண்டவராய் தனது வீட்டை விட்டு நாட்டைக் காக்கும் பணிக்காகப் புறப்படுகிறார். மனைவி பிள்ளைகள் என்ற குடும்ப ஏக்கங்கள் சில நாட்கள் இருந்த போதும் நாட்டின் மீது கொண்ட அன்பும் அக்கறையும் பற்றும் தவிப்பும் அவரது பணிக்கு விரைவில் அழைத்துச் சென்றது.

எதிரிகளின் தாக்குதல் துவங்கிய நேரம் அது. நாட்டிற்காக தன்னையே மறந்த ஜோசப் வெகுநேரம் பயணப்பட்டதால் தனது சக தோழர்களையும் நழுவ விடுகின்றார். தன்னையே அறியாமல் மிருகங்கள் வாழும் காட்டுப் பகுதியில் நுழைகிறார். களைப்பின் மிகுதியால் தண்ணீர் தாகம் எடுக்கின்றது. தோழர்களை தொலைத்துவிட்ட சோகம் ஒருபுறம். தண்ணீர் தாகம் ஒரு புறம், சிறிது தூரம் சென்றதும் சலசலவென்று நிற்காமல் ஓடும் நீரோடையின் சப்தம். ஜோசப்பின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வேகமாய் நீரோடை பக்கமாய் சென்று சென்று தண்ணீரை தாகம் தீர அள்ளி குடிக்கின்றார். தண்ணீர் தாகம் குறைய குறைய அதே நீரோடையில் தனது தாகத்தை தீர்த்துக் கொண்டிருக்கும் சிங்கத்தின் சப்தத்தை கேட்கின்றார். குடித்த தண்ணீர் கூட எங்கோ சென்று விட்டது அவருக்கு.

சிங்கத்தை பார்த்த பதட்டத்தில் எழுந்துக் கூட நடக்க வலுவில்லாதவராய் குழந்தைப் போல சப்தமில்லாமல் நான்கு காலில் நடக்க ஆரம்பிக்கின்றார். மரத்தின் பின்புறம் இருந்த முயலொன்று இவரின் சத்தத்தை கேட்டு தலைத்தெறிக்க ஒடியது. இதைப் பார்த்த சிங்கம் ஜோசப்பை பார்த்து விட்டு தண்ணீரை விட்டு விட்டு அவரை துரத்த ஆரம்பித்தது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்த அளவு ஓடி ஒரு புதரில் தன்னை மறைத்துக் கொண்டார். அங்கும் இங்கும் சுற்றிப் பார்த்து விட்டு விரக்தியில் சிங்கம் சென்றுவிடாது.

சிங்கம் தன்னை விட்டு தூரம் சென்றதை உணர்ந்த அவர் வெளியில் வந்து வேகமாக நடக்க ஆரம்பித்தார். புதரில் இருந்தபோது அவர் முழந்தால் படியிட்டு இறைவனை நோக்கி செபித்தார். உமக்கு சித்தமானால் இக்கொடிய விலங்கிடமிருந்து தன்னைக் காப்பாற்றும்படி செபித்தார். செபித்த அடுத்த நிமிடமே சிங்கம் அவ்விடத்தை விட்டு அகன்று சென்றது.

நமது உண்மையான அர்ப்பணம் நம்பிக்கையான இறைவேண்டுதல் நம்மை மீண்டும் வாழ வைக்கிறது. தவக்காலத்தில் இருக்கும் நமக்கு இல்லறமோ துறவறமோ எதுவாக இருந்தாலும் நமது அர்ப்பணமும் இறை வேண்டலும் உன்னதமான நிலையை அடைய துணை புரிகிறது. இதன் வழியில் நடந்து நமது வாழ்வைப் புதுப்பித்துக் கொள்வோம்.



26 ஒரு குரு தன் சகோதர குருக்களுக்கு...

அருட்பணி பியர் கையே MEP

தமிழாக்கம் Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

## அதிகாரம் 6 எளியோரான நாம்

சில சமையங்களில் நமக்கு இப்படி ஒரு சோதனை எழலாம். இயேசுவின் அழைத்தலுக்குப் பதிலளித்து நம்மை அவருடைய சேனையில் பதிவு செய்துகொண்டதால் ஏதோ வீரத்தன்மையான, அற்புதமான, பெரிய காரியம் செய்துவிட்டதாக எண்ணலாம். நம் அழைத்தலுக்கு அவருக்கு நன்றி கூறுவதற்குப் பதிலாக அவரே நமக்கு நன்றியுள்ளவராக இருக்க வேண்டும் என்ற எண்ணம் கூட எழலாம். அவருக்குப் பெரிய சேவை செய்துவிட்டதாக கற்பனை செய்துகொள்கிறோம்.

இயேசு நம்மிடம் தம்மைப் பின்பற்றும்படி அழைக்கும்போது நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நம்மைவிட திறமைகளிலும் எல்லாவற்றிலும் சிறந்தவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் நம்மைவிடச் சிறந்த குருக்களாக இருந்திருப்பார்கள். நம்மைவிட அதிக நன்மையும் செய்யக் கூடும். அவர்களில் சிலரை உங்களால் நினைவு கூர முடியுமா? இருந்தபோதிலும் கடவுள் அவர்களை உலகிலேயே விட்டுவிட்டு நம்மைத் தேர்ந்துகொண்டார், ஏன்?

காரணம் கடவுள் அவர்களைவிட நம்மை அதிகம் அன்புசெய்துள்ளார். ஏனெனில் நம்மை அவரோடு நித்தியத்தில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். நம்முடைய குணநலன்கள், முன்கணிப்புகள், நமது முன்னோரிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட நாட்டங்கள் நம்மைப் பலவீனர்களாக்கலாம். ஒரு வேளை நம் வாழ்வில் எழும் புயல், நாம் சந்திக்கும் தீமை சோதனைகளை எதிர்க்க நம் திறமை இவை எல்லாம் நமக்காக உலகில் காத்திருக்கின்றன. அவை எல்லாம் நம்மை அண்டாதவாறு அவர் நம்மை வைத்துள்ளார். அவருடைய அருளின்றி நம் ஆன்மாவை இழந்து நாம் கீழே விழுந்துவிடுவோம்.

எனவே உலகிலிருந்து நம்மை எடுத்துவிடுவது அவருடைய திட்டம். எனவே எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து நாம் கடும் புயல் வீசும் நாட்களில் நம்மைப் பாதுகாப்பாக குருமட சுவர்கள் மத்தியில் வைத்துள்ளார். நாம் புனிதத்துக்கான வழியில் முன்னேற பல வாய்ப்புகளை அளித்துள்ளார்: திருப்பலி, கட்டளை செபம், பக்தி முயற்சிகள் என்று ஏராளமான அருள் வரங்கள். நம்மையே நாம் இழக்க விரும்பினால் நாம் அவ்வாறு செய்ய முடியாது: நித்தியத்துக்கும் நான் உன்னை இரக்கத்தால் ஈர்த்துக்கொண்டேன்.

உலகின் தொடக்கத்திலிருந்தே யுகங்களுக்கு மேல் யுகங்கள் கடந்துவிட்டன. பல இலட்சக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர். எண்ண முடியாத ஆன்மாக்கள் விண்ணுலகில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இன்னும் பலர் தினமும் அங்கு நுழைகின்றனர்.

ஆனால் அங்கு நமது இடம் வெறுமையாக உள்ளது. நமது வருகைக்காகக் காத்திருக்கிறது. அவை நம்முடையவை. நாம் இறக்கும் வேளையில் நாம் தகுதியுள்ளவர்களாக இருந்தால் அவற்றை நமக்களிக்கக் கடவுள் காத்துக்கொண்டிருக்கிறார். அதாவது நாம் புனிதர்களாக இருந்தால். விண்ணுலகம் என்பது புனிதர்களின் இல்லம். அங்கு புனிதர்கள் மட்டுமே அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த அந்த அரசுக்குள் நுழைய முடியும்.



கடவுளுடைய வெள்ளை நீதி அரியணை முன் நாம் தோன்றும்போது, நம்முடைய கண்காணிப்பின் கணக்கை ஒப்புவிக்கும் நேரத்தில் சாவான பாவநிலையில் நாம் இருந்தால் நம் முன் விண்ணுலகக் கதவுகள் நித்தியத்துக்கும் மூடப்படும். நாம் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்ற நம்பிக்கைக்கே இடமில்லை. நாமே நம்மை நித்தியத்துக்கும் தண்டித்துக்கொண்டோம். சொல்ல முடியாத வேதனைகளுக்கும் துன்பத்துக்கும் நம்மை ஆளாக்கிக் கொண்டோம்.

நமது ஆன்மாக்கள் கடவுளுக்கு எதிரான மன நிலையில் இருந்தால், அற்பப்பாவங்கள் மீது நமக்குள்ள பற்றுதல்களில் இருந்து இன்னும் நம்மைத் தூய்மைப் படுத்தாதிருந்தால், அவற்றின் தீய குணங்களும், முன் கோபமும், ஆசாபாசங்களும், குறைகளும் இன்னும் நம்மில் நிறைந்திருந்தால் அவற்றை நாம் வெற்றிகொள்ளவில்லை என்றால், உத்தரிக்கும் தலத்தில் நமக்கு அதைப் பரிகரிக்க இடமுண்டு. ஒன்று நிச்சயமாக நாம் முழுமையாக தூய்மையாகாதவரை, முழுமையாக புனிதராகாத வரை, முழுமையாக ஒளியுள்ளவராகாத வரை, நமக்கு விண்ணகத்தில் இடமில்லை.

இது இவ்வாறாயின் நம் சொந்த ஆதாயத்துக்காகத் தானே நாம் புனிதராகக் கட்டளை இடப்பட்டுள்ளோம். இது நமக்கு வாழ்விற்கும் இறப்புக்குமான கேள்வி. அணுக முடியாத கடவுளோடு இருக்கும் நித்திய ஆனந்தம் பற்றிய கேள்வி, அல்லது அலகைகளோடு பயங்கரமான வேதனை மிகுந்த நரகத்துக்குச் செல்வது. நாம் புனிதராக இருந்தால் சந்தேகமற நாம் நித்தித்துக்கும் முடிவில்லாத மகிழ்ச்சியில் இருப்போம்.

நாம் புனிதராக மறுத்தால் நம்மையே நாம் முழு விருப்பத்தோடு சகித்துக்கொள்ள முடியாத துன்பத்துக்கும் முடிவில்லாத காலத்துக்கும் உட்படுத்துகிறோம். இந்த இரண்டுக்குமிடையே தத்தளிப்போமா? இன்றே, இப்போதே முடிவு செய்ய வேண்டும். இது ஒரு வேளை உங்களுடைய இறுதி தியானமாக இருக்கலாம். இதன் பிறகு தீர்ப்பு நாள்!

நமது நித்தியம் நாம் எடுக்கும் தீர்மானம், அதைப் பிரமாணிக்கத்துடன் இந்தச் சில நாட்களில், இந்தச் சில மாதங்களில், இந்தச் சில ஆண்டுகளில் கடைப்பிடிப்பதைப் பொருத்துள்ளது. நாம் வாழவிருக்கும் காலத்தில் இப்போது நமது நமது எதிர்கால நிலையை என்றைக்குமாக முடிவு செய்ய வேண்டும்.

கடந்தது கடந்துவிட்டது அதை மீண்டும் பெற முடியாது. நாம் செய்ததைச் செய்துவிட்டோம். கடவுள் கூட அதை இப்போது வேறு விதமாகச் செய்ய முடியாது. நாம் என்னவாக இருக்க வேண்டும் என்று கடவுள் விரும்பினாரோ அதற்கு மாறாக நாம் வாழ்ந்திருந்தால் இப்போது நாம் செய்ய வேண்டியதெல்லாம் நடுக்கத்தோடு பாவத்துக்காக மனம் வருந்துவது, அவற்றிற்காக நம் நெற்றி புழுதியில் படிய அவருடைய இரக்கம் நிறைந்த மன்னிப்பை வேண்டுவது. ஆனால் நம் எதிர்காலம் இன்னும் நம் கைகளில் உள்ளது. நாம் விரும்புவது போல அதை மாற்றி அமைக்க முடியும். போர்க்களத்தில் முதல் பகுதியில் தோற்றுவிட்டோமா? இன்னும் அடுத்த பகுதி உண்டு. இறையருளுடன் நாம் வெற்றி பெறுவோம் என்பது நிச்சயம். பழைய வாசகம் எல்லாம் புதிதாக இருக்கும். இதயமும் பணி புரியும்.

தொடரும்



## யார் உயர்ந்தவர்கள்?

- திரு. அல்போன்ஸ் மோசஸ்
புதுச்சேரி-9.

அந்த மரத்தில் பூக்களும் கனிகளும் நிரம்பி இருந்தன. அப்போது அங்கு வந்த ஒரு ஞானி தன் கையிலிருந்த நீரை அந்த மரத்தின் வேரில் ஊற்றி மரத்தை வணங்கி நின்றார். அதைக் கண்ட பூக்களுக்கும் கனிகளுக்கும் ஒரே கோபம்.

அவை ஞானியைப் பார்த்து, “ஐயா நாங்கள் தானே உங்களுக்குச் சுவையான உணவாகின்றோம். ஆனால் நீங்களோ எங்களை விட்டு விட்டு வேர்களில் தண்ணீரை ஊற்றி அவற்றை வணங்குகின்றீரே இது என்ன நியாயம்” அதற்கு அவர் “நீங்கள் மேலே உள்ள கிளைகளில் காய்த்துப் பழுத்துத் தொங்குகின்றீர்கள். ஆனால் நீங்கள் உருவாகக் காரணமான வேர்களோ தங்களை அர்ப்பணித்து நிலத்துக்கடியில் ஆழமாகச் சென்று நீரைத் தேடி அதனை உறிஞ்சி அதன் வழியாக உங்களை வாழ்விக்கின்றன. அவைத் தரும் உழைப்பால் தான் நீங்கள் உயரத்தில் இருந்து கொண்டு இனிப்பாகத் தொங்கிக் கொண்டிருக்கின்றீர்கள். **தங்களைத் தாழ்த்திப் பிறரை உயர்த்துபவர்களே உயர்ந்தவர்கள்**” என்றார்.

பலபேர் மனித குலத்திற்கு அச்சாணியாய், வேறாய் இருந்து இந்த உலகிற்கு தம்மை அர்ப்பணித்த பெற்றோர்களை உதாசீனப்படுத்தி ஓரங்கட்டிவிட்டு தான்தோன்றித்தனமாக தங்கள் வாழ்க்கைப் படகினை ஓட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் இல்லையேல் தானும் இல்லை என்பதை உணர்வதில்லை.

ஒரு முதியவர் தனது செல்போனை சர்வீஸ் செய்யும் கடைக்குக் கொண்டு போனார். கடைக்காரர் அந்தப் போனை வாங்கிப் பார்த்து, “ஐயா உங்க போன் நல்லாதான் இருக்கிறது. அதல என்ன பிரச்சனை” என்று கேட்டார். அதற்கு அந்த பெரியவர் “ஐயா நிறைய பேர் பேசறதைக் கேட்கிறேன். ஆனா என் பசங்க பேசறத மட்டும் என்னால கேட்க முடியல. எதனால என்றுத் தெரியவில்லை” என்றார். தவறு யாருடையது என்பது கடைக்காரருக்குத் தெரிந்ததால் முதியவரைப் பரிதாபத்தோடு பார்த்தார்.

கண்கண்ட தெய்வங்களான பெற்றோரை முதியோர் இல்லத்தில் சேர்க்கும்போதே நமக்கும் பிற்காலத்தில் இதே நிலைதான் ஏற்படும் என்பதை பல பிள்ளைகள் உணரத் பத்துக் கட்டளையில் 4வது கட்டளை மிகத் தெளிவாக **தந்தை தாய் பேண்** என்பதை உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாள் நீடிக்கும்படி உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட என்று கூறுகின்றது (விப:20/12)

வயதான பெற்றோரோடு தினமும் அலைபேசியில் பேசலாம். அல்லது கைபேசியில் அவர்களைப் பார்த்தே பேசலாம். கனிவான இரண்டு வார்த்தைகள் அவர்களது வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும். வறண்டுபோன வாழ்க்கை வளமாக துளிர்க்கும்.

எங்கடா காசு கேட்டுவிடப் போகின்றார்களோ என்ற பயத்தினால்தான் பலபேர் பேசுவதேயில்லை. ஆனால் காசு பணத்தைவிட அவர்கள் எதிர்பார்ப்பது பிள்ளைகளின் நல்வாழ்க்கை மட்டுமல்ல. நல்லா நாலு வார்த்தைகளும்தான்.

## நான்காவது ஞானியின் கதை



11 தொடர்ச்சி

திரு. ஜெயராஜ் டானியேல்,
முத்தியால்பேட்டை, புதுவை-3

அர்தபனின் தொண்டை அடைத்தது. பயத்தால் அல்ல. பயணத்தை வீணாகத் தாமதிக்கிறோமே என்ற எரிச்சலால். இறக்கும் நிலையில் உள்ள அந்நியருக்கு இருளில் எப்படி உதவ முடியும்? அறிமுகமில்லாத மனித உயிர் மீது எப்படி இரக்கப்பட்டு உதவி செய்ய முடியும்?

ஒரு மணி நேரம் தாமதித்தால் குறித்த நேரத்தில் போர்சிப்பாவை அடைய முடியாது. பயணத்தைக் கைவிட்டு விட்டதாக நினைத்து தோழர்கள் புறப்பட்டுப் போய் விடுவார்கள். பிறகு தேடலை இழக்க நேரிடும்.

பயணத்தைத் தொடர்ந்தால் இந்த மனிதன் நிச்சயமாக இறந்துவிடுவான். தங்கினாலோ உயிர் மீட்கப்படலாம். நெருக்கடிக்கு ஏற்ப அவனுடைய ஆவி துடித்து, படபடத்தது. மனித நேய செயல் மூலம் தெய்வீக நம்பிக்கை தரும் பரிசை அர்தபன் இழக்க வேண்டுமா? உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் ஏழை எபிரேயருக்கு ஒரு கோப்பை குளிர்ந்த நீரைக் கொடுப்பதற்காக நட்சத்திரத்தைப் பின்தொடர்வதைப் புறக்கணித்து சிறிது தாமதிக்க வேண்டுமா?

“உண்மையும் தூய்மையுமான கடவுளே! உமக்கு மட்டுமே தெரிந்த ஞானத்தின் வழியான புனித பாதையில் என்னை வழிநடத்தும்” என்று ஜெபித்தார். பிறகு நோயாளியிடம் திரும்பி, கைப்பிடியை தளர்த்தி, பேரீச்சமரத்தின் அடியில் இருந்த ஒரு சிறிய மேட்டுக்கு அழைத்துச் சென்றார். அவனுடைய தலைப்பாகையின் தடித்த மடிப்புகளை அவிழ்த்து, அமுங்கிக் கிடந்த மார்பின் மேலிருந்த ஆடையை விலக்கினார். அருகில் இருந்த சிறு கால்வாயின் நீரை மொண்டு வந்து, அவனுடைய புருவத்தையும் வாயையும் ஈரமாக்கினார். தன்னுடைய அரைக்கச்சையில் வழக்கமாக எடுத்துச் செல்லும் சக்திவாய்ந்த மூலிகை மருந்துகளைக் கலக்கினார். ஏனெனில், ஞானிகள் ஜோதிடத்தில் மட்டுமல்லாமல் மருத்துவத்திலும் சிறந்து விளங்கினார்கள். கலந்த பானத்தை மெதுவாக அவனுடைய வெளிறிய உதடுகளுக்கிடையில் ஊற்றினார். ஒரு சிறந்த மருத்துவர் மட்டுமே செய்யக்கூடிய அனைத்தையும் அவர் வரிசைக்கிரமமாக செய்தார். இறுதியில், அந்த மனிதனுக்கு உயிர் திரும்பியது. எழுந்து உட்கார்ந்து அவரைப் பார்த்தான்.

“யார் நீ? என்னைக் காப்பாற்ற ஏன் இங்கு வந்தாய்?” என்று நாட்டுப்புறப் பேச்சு வழக்கில் வினவினான்.

“நான் எக்படானா நகரத்தின் ஞானி அர்தபன். யூதர்களின் அரசரும் மனிதர்களுக்கெல்லாம் மீட்பராகவும் பிறக்கப்போகும் ஒருவரைத் தேடி ஜெருசலேமுக்கு செல்கிறேன். இனியும் தாமதிக்கமாட்டேன். தோழர்கள் எனக்காகக் காத்திருக்கமாட்டார்கள், பரவாயில்லை. இதோ, ரொட்டியும் திராட்சைரசமும் மிச்சமிருக்கிறது. நோய்களுக்கான மூலிகை பானமும் இருக்கிறது. சரி. இனி தெம்பு வந்ததும் உன்னால் பாபிலோனில் எபிரேயர்களின் குடியிருப்புகளைக் கண்டடைய முடியும்” என்று பதிலளித்ததும் எபிரேயரான அந்த யூதன் நடுங்கும் கைகளை வானத்தை நோக்கி பக்தியுடன் உயர்த்தினான்.

-தொடரும்

## மரியாயின் சேனை – செனாத்தூஸ்

1921-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட மரியாயின் சேனை 100 ஆண்டுகளைக் கடந்த நிலையில் நம் புதுவை–கடலூர் உயர் மறைமாவட்டத்தில் செயல்பட்ட புதுவை கொமித்சியம், செனாத்தூஸ் என்ற உயர்நிலை அந்தஸ்திற்கு, சேனை தலைமைப்பீடமான கொன்சீலியம் (அயல்லாந்து) உயர்த்திய 19-ஆம் ஆண்டு நிறைவு விழாவினை 19-02-2023 ஆம் நாள் கொண்டாடும் வகையில் 1500-க்கும் மேற்பட்ட சேனையாளர்கள் கலந்துகொள்ள நமது பேராயர் டாக்டர் பிரான்சிஸ் கலிஸ்ட் அவர்கள் தலைமையேற்று கூட்டுத்திருப்பலி நிறைவேற்றி விழாவினை சிறப்பித்தார்கள்.



முன்னதாக இவ்விழாவிற்கு தலைமையேற்ற செனாத்தூஸ் ஆன்ம இயக்குநர் அருட்தந்தை A.தாமஸ் அடிகள் அவர்களையும், சேலம், தர்மபுரி, கும்பகோணம், தஞ்சாவூர் , புதுக்கோட்டை, லால்குடி, விரியூர், விழுப்புரம் கொமித்சியம் (8 நெ.) மற்றும் 12 நேரடி கியூரியாக்கள், 24 பிரசீடியங்களில் இருந்து வருகைபுரிந்த சேனையாளர்களையும் செனாத்தூஸ் தலைவர் சகோ. ஜெயசீலி செல்வம் வரவேற்று, அலுவலர்கள் அனைவருக்கும் ஆன்ம இயக்குநர் வழியாக பொன்னாடை மற்றும் நினைவு பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்கள்.

பேராலய பங்குதந்தை & VF அருட்தந்தை அல்போன்ஸ் சந்தனம், விரியூர் பங்குதந்தை & VF அருட்தந்தை C. சகாய செல்வராஜ் விருத்தாச்சலம் பங்குதந்தை & VF அருட்தந்தை P.பால்ராஜ்குமார் பெத்தி செமினார் மேல்நிலைப்பள்ளி முதல்வர் அருட்தந்தை R. பாஸ்கல்ராஜ் அவர்கள், கீழ்புத்துப்பட்டு, அருட்தந்தை A.சிரில் மற்றும் S.P.ஆரோக்கியதாஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். கூட்டுத்திருப்பலியை தலைமையேற்று நடத்திய பேராயர் அவர்கள் தமது சிறப்பு மறையுரையில் சேனையாளர்களின் பண்பு, மாதாவைப் போன்றதாக இருக்க வேண்டும் என்று நற்செய்தியில் இருந்து எடுத்துக்காட்டி விளக்கினார்.

இரட்டை வேடம் தரித்தவர்களாகவும், பழிவாங்கும் குணம் கொண்டவர்களாகவும், தீமைகள் செய்பவர்களாகவும் இருந்தால் தூய ஆவி உங்களில் குடிகொள்ளமாட்டார் என்றும், நீங்கள் அனைவரும் கடவுளின் கோவில், தூய ஆவியால் நிரப்பப்பட்டு தூய்மையாளர்களாக, சாதி, மதம் இனம் வேறுபாடின்றி பழகி ஒற்றுமையாக நற்செய்திபணியை நாள்தோறும் அந்தந்த தலதிருச்சபையோடு இணைந்து செயலாற்ற வேண்டும் என்றார். நமது பாப்பரசர் எதிர்ப்பார்ப்பதுபோல கூட்டொருங்கிய திருஅவைக்காகவும் ஆன்மீகத்தோடு இறையாட்சியை கட்டி எழுப்பவேண்டிய பணி சேனையாளர்கள் மீது சுமத்தப்பட்டிருப்பதாகவும், அறிவித்து சிறப்பு ஆசிர் வழங்கினார்.

திருப்பலி பாடல்களை நெய்வேலி கியூரியா சேனையர் பொறுப்பேற்று இசைத்தார்கள். முன்னதாக பெத்திசெமினார் மேல்நிலைப் பள்ளி முதல்வர் அவர்கள் எஸ்காந்து ஹால், நாற்காலிகள், ஒலிபெருக்கிகள், மின் இணைப்புகள் மற்றும் உணவு ஏற்பாடுகள் அனைத்தையும் தாமாக முன்வந்து இறையாட்சியின் பணியை மரியின் வழி செய்யும் மரியாயின் சேனையாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் உதவி செய்வதில் தான் பெருமகிழ்ச்சி கொள்வதாக அறிவித்தார். அவர்களுக்கு மரியாயின் சேனை செனாத்தூஸ் தனிப்பட்ட நன்றியை தெரிவிப்பதாக தலைவர் அறிவித்தார்.

செனாத்தூஸ் 19-ஆம் ஆண்டறிக்கையை செயலர் வாசித்தார்கள், நிகழ்ச்சிகளை துணைச்செயலாளர் தொகுத்து வழங்கினார். இறுதியில் துணைத் தலைவர் அனைவருக்கும் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை செனாத்தூஸ் அலுவலர்கள், சகோ. ஜெயசிலி செல்வம், சகோ. அந்தோணிராஜ், சகோ. பத்ரீசியா, சகோ. ஆல்பர்ட், சகோ. லூமன் ரெஜி, மற்றும் சகோ. ஷாலி ராபார்ட் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

*இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!!*

என்றும் அன்னையின் பணியில்
**சகோ. ஜெயசீலி செல்வம்**,
தலைவி, செனாத்தூஸ்

## மறைமாநில குருக்களுக்கு அழைப்பு

அன்புமிக்க சகோதர குருக்களே! உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கம்.

மிஷன் அச்சக வளர்ச்சியிலும், சர்வவியாபி வார இதழ் தரத்தில் உயர்வதற்கும் தங்களின் மேலான ஒத்துழைப்பிற்கு நன்றிகள். ஒரு சில அருட்தந்தையர்கள் ஞாயிறு வாரச் சிந்தனைகளை சர்வவியாபியின் வழியாக பகிர்ந்து கொள்கிறார்கள். அவர்களுக்கு நம் மனமார்ந்த பாராட்டுக்கள்.

புது முயற்சியாக 2024 ஆம் ஆண்டு திருவழிபாட்டு வாசகக் கையேடு **(Bible Diary)** வாசகங்களை ஒட்டிய சிந்தனை பகிர்வோடு நாம் தயாரித்து வெளியிடலாம் என்ற எண்ணம் நம் குருக்கள் ஒரு சிலரிடம் இருந்து வெளிப்படுத்தப்பட்டது. அதற்கான முன் தாயாரிப்பு, முயற்சிகளை நாம் இப்போதே தொடங்கவேண்டும். வசாகங்கள் ஒட்டிய சிந்தனைகளை வழங்கி இம்முயற்சி வெற்றி பெற உதவிடும்படி கேட்டுக் கொள்கிறோம். ஆர்வம் உள்ள அருட்தந்தையர்கள் தங்கள் ஒப்புதலை இம்மாதம் 26 ஆம் தேதிக்குள் அருட்தந்தை L. ஆரோக்கியதாஸ்-ன் கைபேசி 9578839605 எண்ணுக்கு தொடர்பு கொள்ளவும்.

இவண்,
**மேலாளர், மிஷன் அச்சகம்.**



# தீரத் தியாகி

**(புனித தேவசகாயம் வரலாறு)**

- Dr. **தீபக் தாமஸ்,**
பல் மருத்துவர், புதுவை.



மன்னர் குழப்பமுற்றார்.
திருப்படித்தானம் என்னும் பூசைக்கு
தயாராகிக் கொண்டிருந்தார் அவர்.
போரில் கொன்ற பாவங்கள்
போக்குவதற்காகவே அந்த பூசை.

“சரி! இன்னும் தண்டனை கொடுங்கள்.
நீலகண்டர் திருந்த வேண்டும்.
அதுவே முக்கியம். அதுவே முக்கியம்”
என்று சொல்-ப்போனார் மன்னர்.



இது போதாதா அவர்களுக்கு?
கறுப்பு எருமையின் மேல்
கெட்டவர்கள் அவரை ஏற்றி
கல்குளம் தாலுகா அதிகாரியிடம்
கொண்டு போய் விட்டனர்.

எருமையின் மீதேறி அவர் செல்கையில்
இரக்கப்படாதோரே இல்லை எனலாம்.
“எப்படி வாழ்ந்தவர்? எப்படி வாழ வேண்டியவர்?
இப்படி செல்கிறாரே
என கண்ணீர் வடித்தனர்.”

“இவராய் வரவழைத்துக் கொண்டதுதானே எல்லாம்”
என எள்ளி நகையாடுவோரும் இருந்தனர்.

எருமையின் மேல் அமர்ந்து
ஏசுபிரானை துதித்தபடியே
ஊருக்குள் ஊர்வலமாய்
கல்குளம் வந்தடைந்தார் பிள்ளை.

கல்குளம் அதிகாரி கனிவுடன் கேட்டார்.
“நீலகண்டரே!
நீர் இப்படி செய்யலாமா?
மதி கொண்ட நீரே
மன்னருக்கு துரோகம் செய்யலாமா?
மற்ற மதத்தை ஏற்கலாமா?”

“அன்புள்ள அதிகாரியே!
நான் மட்டுமல்ல
நம் மன்னருமே
மற்ற மதத்தை ஏற்றிருக்கிறார்”
என புதிர் போட்டார் பிள்ளை.

என்ன? என்ன சொன்னீர்?
அதிர்ச்சியுடன் கேட்டார் அதிகாரி.



தொடரும்....

## விண்ணக வாழ்வின் 5-ஆம் ஆண்டு நினைவஞ்ச-



**Augustin Caillard**
(Superintending Engineer, TNEB)

**தோற்றம் : 30-04-1947**
**மறைவு : 15-03-2018**

வாழ்ந்தாலும் அவருக்கென்றே வாழ்கிறோம்;
இறந்தாலும் அவருக்கென்றே இறக்கிறோம்.
- உரோ.14.8

கடுஞ்சொல் கூறாது இன்முகம் மாறாது
கடவுளுக்கு உகந்த மனிதனாய் வாழ்ந்து
ஒழுக்கம் பக்தியில் சிறந்து இறைவனில்
ஒன்றித்து இருக்க அழைக்கப்பட்டு
ஆண்டுகள் ஐந்து உருண்டன! இன்று
மீண்டும் உமது அன்பை அமைதியை
நினைக்கும் நேரம் விழிகளின் ஓரம்
நனையும்! நெஞ்சில் நீங்காத பாரம்!

*இறைவா! உம்மால் அன்புடன் எடுத்துக் கொள்ளப்பட்ட அகஸ்டின் கையார் அவர்களின் ஆன்மா நித்திய பேரின்பத்தில் இளைப்பாற செபிக்கிறோம்.*

**நினைவுத் திருப்ப-**

15-03-2023 புதன் அன்று காலை 6.00 மணிக்கு புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்

பிரிவால் துயறுரும்

மனைவி : **ரெஜினா கையார்**
மகன்கள் : **மார்ட்டின்-அலெக்ஸிஸ்**
மருமகள்கள் : **பிரதீபா, ரூபா**
பேரப்பிள்ளைகள்:
**மாயா, தருண், பெனடிக்ட்**

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்ச-

**தோற்றம் :03-10-1940**



**மறைவு : 15-03-2022**

**திரு. S. பெரியநாயகசாமி**

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர் - யோவா 11:25

15-03-2023 புதன்கிழமை அன்று பணிக்கன்குப்பம், புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் எம் தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்ப- நிறைவேற்றப்படும்.

**பிரிவால் வருந்தும்**

மனைவி, மகன்கள்,
மகன்: அருட்பணி P. அந்தோணிராஜ்
மகள்கள், மருமகன்கள், மருமகள்கள்,
பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்.



மண்ணில் 05-05-1940

விண்ணில் 17-03-2018

# விண்ணக வாழ்வின் 5-ஆம் ஆண்டு நினைவு

புனித சேவியர் மேல்நிலைப் பள்ளி -முகையூர் நிறுவனர்

புனித பீட்டர் பால் கல்வி மற்றும் கலாச்சார அறக்கட்டளை

புனித பீட்டர் பால் சிறப்பு மேல்நிலைப் பள்ளி - முகையூர்.

புனித பீட்டர் பால் ஆரம்பப் பள்ளி - புரவடை.

செல்வி பிரிண்டர்ஸ், முகையூர்.

## திரு. L. செல்வராஜ் B.A.,B.Ed.

முன்னாள் உதவி தலைமை ஆசிரியர்

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - (யோவா 11:25)

**நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே, முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக.**

பிரிவால் வருந்தும்

**மனைவி, மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.**

---

### விண்ணக வாழ்வின் 18-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் : 11-07-1917



மறைவு : 15-03-2005

## திரு. அதிசயநாத தாவீது

"இது முதல் ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறுபெற்றோர்." – திவெ 14:13

15-3-2023 புதன்கிழமை அன்று எங்கள் அன்பு தந்தையை நினைவு கூர்ந்து அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். அன்றைய தினம் புதுவை, புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயம், புனித சம்மனசுக்கள் ராக்கினி ஆலயம் மற்றும் திரு இருதய ஆண்டவர் பசி-க்காவிலும் அன்னாருக்காக திருப்பலி நிறைவேற்றப்படும்.

தந்தையின் பிரிவால் துயருறும்

**பிள்ளைகள்**

---

### விண்ணக வாழ்வின் 7-ஆம் ஆண்டு நினைவேந்தல்

தோற்றம் :04-04-1948



மறைவு: 15-03-2016

## திருமதி.ஜோஸ்பின் பிலோமேன்ராஜ்

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் - யோவா 11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 15-3-2023 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு முத்தியால்பேட்டை, புனித அந்தோணியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும். விசுவாசிகள், உத்தரிக்கிற ஆன்மாக்களுக்காக மன்றாட வேண்டுகிறோம்.

பிரிவால் வாடும்

கணவர்: **இர. பிலோமேன்ராஜ்**

மகள்கள், மகன், மருமகன்கள், மருமகள், பேரப்பிள்ளைகள்.

---

### விண்ணக வாழ்வின் 29-ஆம் ஆண்டு நினைவு அஞ்ச-

தோற்றம் :14-03-1957



மறைவு : 17-03-1994

## திரு. M. திவ்யநாதன்

மலைகளை நோக்கி என் கண்களை உயர்த்துகின்றேன், எங்கிருந்து எனக்கு உதவி வரும், ஆண்டவரிடமிருந்தே எனக்கு உதவி வரும். – திபா 121:1

ஆண்டவரே! நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும், முடிவில்லா ஒளி இவர்மேல் ஒளிர்வதாக.

பிரிவால் வருந்தும்

மனைவி: **இருதயமேரி**

மகள்: **நான்சி** மருமகன்: **டோமினிக்**

புதுவை

# புனித பேதுரு விவி—ய குறுக்கெழுத்து சிறப்புப் போட்டி – 235

**மார்ச் மாத 2023 வெளியீடு**

அருட்சகோதரர் அ.மே.ஜேம்ஸ் - தாராபுரம்





அன்பு நெஞ்சங்களே

மாதந்தோறும் விவிலியப் போட்டி நடத்தி வரும் எம் சபை சகோதரர் அ.மே.ஜேமஸ் அவர்களையும், ஒவ்வொரு மாதமும் சர்வவியாபி இதழில் விவிலிய போட்டியை வெளியிட அனுமதி வழங்கிவரும் புதுவை கடலூர் மறைமாவட்ட வார இதழான சர்வ வியாபி இதழின் மேலாளர் மேதகு ஆயர் பிரான்சிஸ் கலிஸ்ட் அவர்களையும், இதழின் ஆசிரியர் அருட்தந்தை ஆ.அருளானந்தம் அவர்களையும் போட்டியில் கலந்து கொண்டு பயனடையும் தங்களையும் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

"நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்." (யோவா.15:7) வளர்ந்து வருகின்ற அறிவியல் முன்னேற்றத்தாலும் புதிதாக தோன்றி வருகின்ற நுகர்வு கலாச்சாரத்தாலும் மனிதன் ஈர்க்கப்பட்டு ஞான வழிகளை விட்டு விலகிச் செல்கின்ற இச்சூழலில் எம் சகோதரர் இறைவார்த்தையில் நம்பிக்கைகொண்டு, விடாமுயற்சியோடு 235-வது விவிலியப் போட்டியை தொடர்ந்து நடத்தி வருகிறார், பாராட்டுக்கள். இறைவார்த்தை அள்ள அள்ளக் குறையாத கருத்துக் கருவூலம், சிந்திக்கச் சிந்திக்கப் புது கருத்துக்கள் ஊற்றெடுத்துக் கொண்டே இருக்கின்ற ஜீவ நீர் ஊற்று. கடந்த 20 ஆண்டுகளாக இந்த நீர் ஊற்றுக்கு மக்களை அழைத்துக் கொண்டே இருக்கிறார் எம் சகோதரர் அ.மே.ஜேம்ஸ்.

போட்டியில் பங்கு கொள்கின்ற உங்கள் ஒவ்வொருவரையும் மீண்டும் பாராட்டுவதில், வாழ்த்துவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். சகோதரர் இறையன்பில் நிலைத்து, சுவைத்து. வளமாய், நலமாய் நாளும் வாழ்ந்து தொடர்ந்து மக்களுக்கு இறைஒளியில் வழிகாட்டிட வாழ்த்துகிறேன்.

இறையாசீருடன்,

அருட்சகோதரர் B.ஜோசப் என்கிற வளன்

சபை அதிபர்

புனித மிக்கேல் துறவற சகோதரர்கள் சபை, கோயமுத்தூர்.

**குறிப்பு**

1. பதில்களை 10.04.2023 க்குள் அனுப்பி வைக்கவும்.

**இடமிருந்து வலம்**

1. மனிதரிடத்திலிருந்து ............ என்றால் அவை ஒழிந்துபோகும்.
2. ............. ஆண்டவரது தண்டனை உன்மேல் வரப்போகிறது.
3. உங்கள் .................. க்கு நீங்களே பொறுப்பு.
6. எந்தச் சுமையையும் உங்கள்மேல் சுமத்தக் ............. என்று
12. ...................க் கூடங்களில் அவர்களை நையப்புடைத்தேன்.
13. இனிமேல் உங்களுள் ............ என் முகத்தைப் பார்க்கப் போவதில்லை.
19. நடந்ததைக் குறித்து மக்கள்......... கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர்.
20. கூட்டத்தினருடன் ..................... பலியிட விரும்பினார்.
21. அதில் ....................... குடிபுகாதிருப்பாராக.
22. இவர்மேல் குற்றம் ......................... க் காரணம் என்ன?

**வலமிருந்து இடம்**

2. அவரைப் பிடித்துத் தலைமைச் சங்கத்துக்கு ...................... ச் சென்றார்கள்.
4. அவரைத் திருத்தூதர்களிடம் ........................ ச் சென்றார்.
5. இவர் .......................... தானிருக்கிறார்.
8. வாழ்வுக்கு ஊற்றானவரை ................ கொன்றுவிட்டீர்கள்.
9. உலகமெங்கும் ............... உண்டாக்குகிற இவர்கள்.
10. இம்மக்களின் ............ கொழுத்துப் போய் விட்டது.
11. தூய ............... ஒவ்வொரு நகரிலும் என்னை எச்சரித்து வருகிறார்.
16. காவலர்கள் வாயிலுக்கு முன் .................. க் காவல் செய்து கொண்டிருந்தார்கள்.
17. கலாத்தியப் பகுதிகளைக் ........... சென்றனர்.
18. தன்னை ஒரு பெரிய .............. க் காட்டிவந்தான்.
21. ............... நாளில் அவருக்கு விருத்தசேதனம் செய்தார்.
22. மூப்பர் சங்கத்தாரும் இதற்குச் ..............

**மே-ருந்து கீழ்**

3. எனெனில் ........... நன்மைகள் பல செய்கிறார்.
5. இதோ மூவர் .............. த் தேடி வந்திருக்கின்றனர்.
6. தாவீது காலம்வரை அக் .......... அங்கேயே இருந்தது.
7. பிற இனத்தாரும்........... பெறுவர்.
8. இப்போது ............ அமைதியுடன் புறப்பட்டுப் போங்கள்.
11. என்னை அடிக்க எப்படி .......... பிறப்பிக்கலாம்.
12. இந்தத் .......... நமக்குநல்ல வருவாயைத் தருகிறது.
15. குளிர்காலத்தைச் ............. ப் பெனிக்சு வந்து சேர்ந்துவிட வேண்டும்.
18. நீங்கள் ............ மாறுங்கள்.
19. அவரைச் சிலுவையில் ............. கொன்றீர்கள்.

**கீழிருந்து மேல்**

3. ....................... அவ்வாறே செய்தார்.
4. அவர்கள் ............... வழங்கும் கடவுளின்
5. நீ ....................... வழக்கை எடுத்துரைக்க அனுமதிக்கிறேன்.
7. எனக்குப்பின் ....................... வருகிறார்.
14. நகரெங்கும் ................... உண்டாயிற்று.

## திருத்தூதர் பணிகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | 17 | | | | 18 |
| | 13 | | | | | | | 11 | |
| | | | | 21 | | | | | |
| | | | 10 | | | | | | 8 |
| | | | | 5 | 7 | ■ | | 15 | |
| | 12 | | | | | | 14 | | 9 |
| 3 | | | 19 | | | | | | |
| | | | | 16 | | 22 | | | |
| | ■ | 1 | | | | | | | 4 |
| 20 | | | | | | 2 | | | |

**பதில் அனுப்ப வேண்டிய முகவரி**


அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ் M.A.,MA.,B.Ed HM
தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப்போட்டி - 235
புனித மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்,
தாராபுரம், திருப்பூர் மாவட்டம் - 638 656.
Cell : 99423 11068, 95979 75430



**Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. FRANCIS KALIST,**

Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.

Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam. Manager : Very Rev. Msgr. A. Arulanandam.